# கண்ணதாசனும் இலக்கியமும் – திருமதி. உமையாள் முத்து

கண்ணதாசன் என்றாலே சுவைக்குப் பஞ்சமில்லை. அதிலும் இலக்கியம் சேர்ந்தால் எப்படி இருக்கும் என்பதை டென்னசி தமிழ்ச்சங்கம் கடந்த அக்டோபர் மாதம் 4ம் தேதி விநாயகர் ஆலயத்தில் ஏற்பாடு செய்திருந்த இலக்கியக் கூட்டத்திற்கு வந்திருந்தவர்களைக் கேட்டால் தெரியும்.

சிறப்பு விருந்தினராக இம்முறை கலந்து கொண்டவர் திருமதி உமையாள் முத்து அவர்கள். திருமதி உமையாள் முத்துவைப் பற்றி அமெரிக்க வாழ் தமிழ் மக்களுக்கு அறிமுகம் தேவையில்லை. அதிலும் அவர் கவிஞர் கண்ணதாசன் மீது கொண்ட ஈடுபாடு அனைவரும் அறிந்ததே. மேற்சொன்ன காரணங்களால், முதன்முறை தமிழ்ச் சங்கத்திற்கு வரும் திருமதி உமையாள் முத்துவை, ‘கண்ணதாசனும் இலக்கியமும்’ என்ற தலைப்பிலேயே உரை நிகழ்த்த வேண்டுவது என்று நிர்வாகக் குழு கூட்டத்தில் முடிவானது.

நேஷ்வில்லுக்கு அவரை அழைத்து வந்தவர் திரு. கோம்ஸ் கணபதி அவர்கள். அவரே திருமதி. உமையாள் முத்துவைப்பற்றி அறிமுக உரை நிகழ்த்த அழைக்கப்பட்டார். ‘என் இனிய தமிழ் நண்பர்களே’ என்று கணீர் குரலில் அவர் ஆரம்பித்த கணமே, பார்வையாளர்கள் நெஞ்சில் நீங்கா இடம் பிடித்துக் கொண்டார். நல்ல வளமான தமிழில் திருமதி. உமையாள் முத்துவைப் பற்றி செய்திகளைக் கூறிய திரு. கோம்ஸ் கணபதி அவர்கள், முதல் நாள் தங்களது ஊரில் நடந்த இலக்கியக் கூட்டத்தைப் பற்றிய செய்திகளையும் பகிர்ந்து கொண்டார்.

அதன் பின் திருமதி. உமையாள் முத்து தனது சிறப்புரையை ஆரம்பித்தார். உரை என்று ஒரு வார்த்தையில் சொல்வதைவிட, நண்பர்களுடன் உரையாடுவதைப் போல கூட்டத்தை நடத்திச் சென்றார் என்பது தான் சரியானது.

மரணம் என்பது தவிர்க்க முடியாதது. இன்றும் நம் இதயத்தில் வாழ்ந்து வரும் பல மேதைகள் தங்கள் வாழ்நாளின் போது மரணத்தை வென்று விடுவோம் என்று சொன்னதில்லை. ஆனால், கவிஞர் கண்ணதாசன், தான் வாழும்போதே ‘எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை’ என்று துணிந்து பாடியவர். சர்வ நிச்சயமாக அது கர்வத்திலால் சொல்லப்பட்டதல்ல. தமிழும் இலக்கியமும் என்றும் சுவை குறையாமல் வாழும் என்ற எண்ணத்தினால் சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட கவிஞனைப் பற்றி பேசுவதற்கு எவ்வளவு திறமை வேண்டுமோ அத்தனையும் கைவரப்பெற்றவர் திருமதி. உமையாள் முத்து அவர்கள்.

கண்ணதாசன் என்றதுமே நினைவுக்கு வரும் பாடல்களை அவர் எடுத்துக்கொள்ளவே இல்லை. ஆனால் இலக்கியச் சுவையில் சற்றும் குறையாத பாடல்களையே தனது உரைக்கு அடிப்படையாகக் கொண்டு பேசினார். ’கலைமகள் கைப்பொருளே உன்னை கவனிக்க ஆளில்லையே’ என்ற வசந்த மாளிகை யில் இடம் பெற்ற பாடலை, கண்ணதாசன் எத்தகைய சூழ்நிலையில் தன்னையே பாட்டிற்குப் பொருளாக வைத்துப் பாடினார் என்பதை உள்ளத்தை உருக்கும் வகையில் விளக்கினார்.

தம்பி விஸ்வநாதன் தூங்கிக்கொண்டிருந்ததால் இசையமைக்கத் தாமதமாகியதையும், அதனால் இயக்குநர் நச்சரிப்புத் தாளாமல் ‘அவனுக்கென்ன தூங்கிவிட்டான் அகப்பட்டவன் நானல்லவா’ என்று பல்லவி எழுதியதையும் சொன்ன போது அரங்கம் சிரிப்பில் அதிர்ந்தது.

கண்ணதாசனைப் பற்றி பல சுவையான தகவல்களையும், அவரது பாடல்களில் இலக்கிய நயம் எப்படிக் கலந்திருக்கிறது என்பதையும் விளக்கமாகக் கூறிய திருமதி உமையாள் முத்து அவர்கள், கூட்டத்தின் முடிவில் நிகழ்காலக் கவிஞர்களையும், அவர்களது கவிதைகளையும், அவை எப்படி கண்ணதாசனிடமிருந்து வேறுபடுகின்றன என்பது பற்றியும் தெளிவுபடுத்தினார். வாலிக்கும் கண்ணதாசனுக்கும் உள்ள நட்புறவை மிகவும் சுவைபடக் கூறினார்.

ஆச்சரியப்படத்தக்க வகையில் அவர் எந்த ஒரு கவிஞரையும் விமர்சிக்கவோ அல்லது சாடவோ இல்லை. ஒவ்வொரு கவிஞரிடத்தும் உள்ள நல்ல விஷயங்களையே எடுத்துக் கொண்டார். கவிதையும் இசையும், கவிஞர் காலத்திலிருந்து மாறிவிட்டதை மிகவும் ஆக்கப்பூர்வமாகவே எடுத்துக் கொண்டார்.

இது இலக்கியக் கூட்டம் என்பதால் அதிகமாக கண்ணதாசனின் அரசியல் செயல்பாடுகளைப்பற்றி அதிகமாக உரைக்கு எடுத்துக்கொள்ளவில்லை. ஆனா இறுதியில், மகாகவி பாரதிக்குக் கூட கிடைக்காத பெருமை கண்ணதாசனுக்கு இறுதி ஊர்வலத்தில் கிடைத்ததை மிகவும் பெருமையுடன் கூறினார். அரசு மரியாதையுடன், அன்றைய முதலமைச்சர் திரு. இராமச்சந்திரன் உட்பட பல தலைவர்கள் அஞ்சலி செலுத்த அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டதைச் சொன்னபோது ஒரு கணம் பார்வையாளர்கள் கலங்கினர்.

கண்ணதாசன் என்று பெயர் கொண்டு, கலங்காதிரு மனமே என்று முதல் பாட்டெழுதி, கண்ணே கலைமானே என்று தாலாட்டுடன் மீளாத்துயில் கொண்ட அந்த மாபெரும் கவிஞனை ஒரு சிலமணி நேரம் எங்கள் நினைவுக்குக் கொண்டுவந்த திருமதி. உமையாள் முத்துவிற்கு நன்றி. அவர் பூரண ஆரோக்கியத்துடன் இன்னும் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு தமிழ்த் தொண்டாற்ற வேண்டுமென்று வாழ்த்துகிறோம்.

- அருணாசலம்